IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 09/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | B.மணிகண்டன் |
| Father's Name /W/o | : | லேட்.பாலசுந்தரம் |
| Religion | : | இந்து |
| Caste | : | - |
| Calling | : | - |
| Address | : | கொளத்தூர் கிராமம், நெமிலி வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 02.08.2022.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.122/6பி ஆகும். சொத்தின் விஸ்தீரணம் 18 சென்ட் ஆகும். வழக்கு சொத்து நஞ்சையா, புஞ்சையா என்றால் நஞ்சையாகும். அந்த இடத்தில் சதுரடி என்று விலை பேசுவார்களா அல்லது சென்டாக விலை பேசுவார்களா என்றால் சென்ட்டு படி தான் சொல்வார்கள். அந்த இடத்தில் வழிகாட்டுதல் மதிப்பிற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் வழிகாட்டுதல் மதிப்பு எவ்வளவு என்றும், சந்தை மதிப்பு எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு என்ன தொகை கொடுத்துள்ளேன் எனறால் முதலில் ரூ.10,000/- முன்பணம் பிறகு ரூ.3,950/- செல் வைத்தேன். விற்பனை ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதி கொடுத்தார்கள் என்றால் 06.11.2000-ல் எழுதினார்கள். அதில் ரூ.10,000/- மட்டும் தான் என்று எழுதிக்கொடுத்தார்களா என்றால் ஆம். இந்த வழக்கு எந்த வருடம் தாக்கல்

செய்தேன் என்றால் 2018-ல் தாக்கல் செய்தேன். வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை 2017-ல் கொடுத்தேன். சட்டப்படியான காலவறைக்குள் நான் அறிவிப்பும் கொடுக்கவில்லை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் பதிவு செய்ய கூப்பிட்டு அவர்கள் வரவில்லை. வழக்கில் என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் வர இயலவில்லை என்று சொல்லியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து யார் பெயரில் தற்போது உள்ளது என்பது தெரியுமா என்றால் நான் வாங்கும்போது அவர் பெயரில் இருந்தது பிறகு அவர் மனைவி பெயரில் எழுதி வைத்துள்ளார். அவர் மனைவியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. சென்ற வாரம் தான் பார்த்து தெரிந்துக்கொண்டேன். வழக்கறிஞரிடம் நடவடிக்கை எடுக்க சொல்லியுள்ளேன். இந்த வழக்கு சொத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றும் என் அனுபவித்தில் உள்ளது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை முருகேசன் மனைவி தேன்மொழி தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் அவர் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உள்ளது என்றால் இல்லை. சட்டப்படியான காலவறைக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.